**தலைப்பு 261 – காலி மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 261 – காலி மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 22 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

காலி மாவட்ட செயலகத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,120.30 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,084.99 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், காலி மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 35.31 மில்லியன் அதாவது 3.15 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,042.30 | 1,037.71 | 4.59 | 0.44 |
| மூலதனம் | 78.00 | 47.28 | 30.72 | 39.38 |
| மொத்தம் | 1,120.30 | 1,084.99 | 35.31 | 3.15 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக காலி மாவட்ட செயலகத்திற்கு 32 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 18 திணைக்களங்களினால் ரூபா 4,022 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 3,699 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 323 மில்லியன் அதாவது 8.03 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 26101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 65.72 | 64.80 | 55.72 | 60.65 | 225.00 | 204.99 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

காலி மாவட்ட செயலகத்தின் கீழுள்ள கட்டுநிதிக் கணக்கு இலக்கம் 7002/0000/00/0308/0014/000 இன் கீழ் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதி ரூபா 0.19 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

காலி மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 05 பொது வைப்புக் கணக்குகளுக்குரிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 422.30 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0002/0094/000 | 0.05 |
| 6000/0000/00/0013/0062/000 | 22.40 |
| 6000/0000/00/0014/0009/000 | 0.00 |
| 6000/0000/00/0016/0045/000 | 328.51 |
| 6000/0000/00/0017/0015/000 | 71.34 |
| மொத்தம் | 422.30 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

காலி மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

காலி மாவட்ட செயலகத்தினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரைாக்கப்படாதிருந்ததுடன் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.2.1 நிதி ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படல்

2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் காலி மாவட்ட செயலகத்தினால் 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பை விஞ்சி ரூபா 190,243 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**3.2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு**

ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் காலி மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அனர்த்த முகாமைத்துவ நிலையம்

மீட்டியாகொட மானம்பிட்டிய வீதியில் மதகு மற்றும் பக்கச் சுவர் நிர்மாணிக்கும் வேலைக்காக ரூபா 3,000,000 தொகையான நிதி ஏற்பாடு கோனபீனுவல பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. வேலையின் பெறுமதி பிரதேச பெறுகைக் குழுவின் எல்லையினை விஞ்சியிருந்த போதிலும், அதற்காக முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்படாது அந்த வேலை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு சமூக அடிப்படையிலான இரண்டு சங்கங்களுக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்தது. அந்த வேலையினை பூர்த்தி செய்வதற்காக குறிப்பிடப்பட்ட தினத்தை விட வருடமொன்றிற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது.

(ஆ) திவிநெகுமு அபிவிருத்தித் திணைக்களம்

திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தால் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசொதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) உள்ளூராட்சி மன்ற பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் மோட்டார் சைக்கிள் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காலி மாவட்ட திவிநெகும அலுவலகத்தினால் 14 பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் பணத்திலிருந்து 2016 யூலை 31 ஆந் திகதியளவில் ரூபா 425,712 தொகை (வட்டியுடன்) அறவீடுகள் நிலுவையாக இருந்தது.

(ii) இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையில் சேவையாற்றிய பணிப்பாளர் ஒருவரும் பிரதி பணிப்பாளர் ஒருவரும் காலி மாவட்ட திவிநெகும அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்தனர். அந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்கும் முறையான நியமனக் கடிதம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கும் போது 2014 யூலை 01 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்காக அந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,905,365 கூட்டுத்தொகையான சம்பளமும் படிகளும் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) விவசாய அமைச்சு

விவசாய அமைச்சினால் பழவகைக் கிராமத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) அந்த செயற்திட்டத்தின் கீழ் ரூபா 193,095 செலவில் யக்கலமுல்ல பிரதேச செயலகப் பிரிவை கேந்திர நிலையமாகக் கொண்டு வணிக நோக்கத்தை

இலக்காகக் கொண்டு 58 நலனாளிகளுக்கு 1000 துாரியன் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட கன்றுகளில் 55 சதவீதமான கன்றுகள் அழிவடைந்திருந்தன.

(ii) மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் ஹபராதுவ பிரதேச செயலகப் பிரிவை கேந்திர நிலையமாகக் கொண்டு 155 நலனாளிகளுக்கு 100,000 அன்னாசிக் கன்றுகளை பகிர்ந்தளிப்பதற்குரிய செயற்திட்டத்திற்காக 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 992,490 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு வழங்கப்பட்ட 7,000 ஒட்டு அன்னாசிக் கன்றுகள் முழுமையாக அழிவடைந்திருந்தன.

(ஈ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

-----------------------------------------------------------

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2014 ஆம் ஆண்டின் போது மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ஒரு பகுதி 2015 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது. அத்தகைய பயன்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) பட்டபொல மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக வேலை ஆரம்பிப்பு முற்பணமாக 2014 திசெம்பர் 22 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்கு ரூபா 1,363,328 தொகையும், 2014 திசெம்பர் 09 ஆந் திகதி மதியுரைச் சேவைக் கட்டணமாக ரூபா 60,929 தொகையும், 2014 திசெம்பர் 19 ஆந் திகதி பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு படியாக ரூபா 16,250 தொகையும் செலவிடப்பட்டு வருடமொன்றிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் வேலை ஆரம்பிக்கப்படாதிருந்த போதிலும், செலுத்தப்பட்ட முற்பணத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அம்பலாங்கொடை கஹட்டபிட்டிய விளையாட்டு மைதானத்தை மீளமைக்கும் செயற்திட்டத்திற்காக வேலை ஆரம்பிப்பு முற்பணமாக 2014 திசெம்பர் 29 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்கு ரூபா 1,253,676 தொகையும், 2014 திசெம்பர் 09 ஆந் திகதி மதியுரை சேவைக் கட்டணமாக ரூபா 56,019 தொகையும், 2014 திசெம்பர் 19 ஆந் திகதி பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் படியாக ரூபா 16,250 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் இதன் உடன்படிக்கைக்காலம் காலாவதியாகியிருந்ததுடன், மேற்கூறப்பட்ட கொடுப்பனவுகள் மேற்கொண்டு வருடமொன்றிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், செயற்திட்டத்தின் வேலை 20 சதவீத அளவேனும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 20 மில்லியன் தொகையான தவலம மாநாட்டு மண்டபத்தை நிர்மாணிப்பதற்குரிய ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட காணியின் உரித்தை தீர்க்காமல் ஒப்பந்தக்காரர் வேலை தளத்தில் பிரவேசிக்க முடியாதிருந்த போதும் வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 3,526,800 தொகை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. காணியின் உரித்து தீர்க்கப்படாதிருந்ததன் காரணமாக இந்த செயற்திட்டத்தை கைவிட வேண்டியேற்பட்டிருந்ததுடன் முற்பணத்தொகை 2015 திசெம்பர் 07 ஆந் திகதி மீள அறவிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், வருடமொன்றிற்கு அண்மித்த காலமாக அரசாங்கத்தின் பணம் வெளித்தரப்பினருக்கு வைத்திருப்பதற்கு அவகாசமளிக்கப்பட்டிருந்தது.

### 3.3 கட்டுநிதிக் கணக்கு

காலி மாவட்ட செயலகத்தில் ரூபா 194,086 தொகையான கட்டுநிதி மீதியொன்று 2006 ஆம் ஆண்டு முதல் காணப்பட்ட போதிலும், அது 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்களை விஞ்சிய ரூபா 124.91 மில்லியன் கூட்டுத்தொகையான 236 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட மாகால்ல நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக காணியைக் கைப்பற்றும் நடவடிக்கைகளுக்காக 2009 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 526,326 தொகை உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக கூற்று

26101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3.65 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 1.76 மில்லியன் தொகையான நிலுவை மீதி 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு தவறியிருந்தது.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

காலி மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 6 பிரதேச செயலகங்களுக்குரிய 05 பிரதேச செயலாளர் விடுதிகளும், உதவி பிரதேச செயலாளர் விடுதியொன்றும் 02 வருடங்கள் முதல் 16 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(ஆ) காலி மாவட்ட செயலகத்தின் தொலைக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1.40 மில்லியன் பெறுமதியான வீடியோ மாநாட்டு தொழில்நுட்ப உபகரணத் தொகுதி 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முழுவதும் விளைவற்றுக் காணப்பட்டது.

**3.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

துப்பாக்கி கட்டளைச் சட்டத்தின் 23(3) ஆம் பிரிவு மற்றும் 2013 செப்தெம்பர் 18 ஆந் திகதிய MOD/CS/3F/2/2013 ஆம் இலக்க அரசாங்க பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் 96 துப்பாக்கி அனுமதிப்பத்திரதாரர்களினால் அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்படாதிருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணங்களின் கூட்டுத்தொகை ரூபா 161,300 ஆக இருந்தது.

**3.8 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் நிறைவேற்றுவதிலுள்ள நலிவுகள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்

தவலம பிரதேச செயலகத்தினால் 2014 திசெம்பர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 450,000 பெறுமதியான திகதி சக்தி வீதி முதல் ஆனந்த அவர்களின் வீடு வரை பாதையின் இருபக்கமும் வெட்டுதல் மற்றும் கொங்கிரீட் இடும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 77,669 தொகை செலவிடப்பட்டதன் பின்னர் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) நியமங்களிற்கு புறம்பாக வேலைகளுக்காக கொடுப்பனவு செய்தல்

02 பிரதேச செயலகங்களில் 02 செயற்திட்டங்களுக்குரிய 02 வேலை விடயங்களின் மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்த போதும் அதற்காக ரூபா 160,253 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களை நிறைவேற்றுதலின் நலிவுகள் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) நியாகம பிரதேச செயலகத்தினால் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.9.1 வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தகாரச் சங்கத்தின் நிதி இயலுமை மற்றும் அனுபவங்களை உறுதிப்படுத்தாது, அந்தச் சங்கத்திற்கு ரூபா 490,000 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் கீழ் படஹெலஹேன வீதிக்கு வடிகாண் வெட்டி கொங்கிரீட் இடும் செயற்திட்டத்தின் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. 05 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் உரிய நியமமின்றி சமப்படுத்தப்பட்டு போடப்பட்டிருந்த 5.79 மீற்றர் நீளமான பகுதிக்காக மதிப்பீட்டு விலை வீதத்தின் அடிப்படையில் எவ்வித கழிப்பனவு இல்லாமல் ரூபா 24,838 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) நியாமக பிரதேச செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட மஹஅம்பறவத்த வீதிக்கு கொங்கிரீட் இடும் செயற்திட்டத்தின் வேலை விடய இலக்கம் 06 இன் கீழ் நியமத்திற்குப் புறம்பாக கொங்கிரீட் கலவை பயன்படுத்தப்பட்டு வீதி கொங்கிரீட் இடப்பட்டமையின் காரணமாக 50 மீற்றர் நீளத்தில் கொங்கிரீட் படை சிறிது சேதத்திற்குள்ளாகியிருந்தது. அந்தப் பகுதிக்காக 14.81 கொங்கிரீட் கன மீற்றருக்காக மதிப்பிடப்பட்ட விலை வீதத்தின் அடிப்படையில் ரூபா 280,303 செலுத்தப்பட்டிருந்தது. மதிப்பீட்டின் பிரகாரம் இந்த வீதியின் கொங்கிரீட் படையின் தடிப்பு 0.125 மீற்றராக இருக்க வேண்டிய போதிலும் 91.3 மீற்றர் நீளப்பகுதியில் கொங்கிரீட் படையின் தடிப்பு 0.115 மீற்றர் முதல் 0.120 மீற்றர் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. அதன் பிரகாரம் அதன் நியமம் மற்றும் நீடிக்கும் தன்மை என்பன நலிவு நிலையில் காணப்பட்டது.

(iii) நெலுவ பிரதேச செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட வெல்லங்குலன கந்த வீதிக்கு கொங்கிரீட் இடும் செயற்திட்டத்தின் வேலை விடய இலக்கம் 06 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நியமத்திற்குப் புறம்பாக கொங்கிரீட் கலவை பயன்படுத்தப்பட்ட வீதியின் 45 அடி நீளத்தில் இடப்பட்டிருந்த கொங்கிரீட் படை, வேலை பூர்த்தி செய்யப்பட்டு 06 மாதங்கள் கழிவதற்குள் கற்கள் வெளிப்பட்டு உடைந்த நிலையில் காணப்பட்டது. அவ்வாறு இருக்கும் போது கொங்கிரீட் 4.18 கன மீற்றருக்காக மதிப்பீட்டு விலை வீதத்தின் பிரகாரம் எந்தக் குறைத்தலுமின்றி ரூபா 58,792 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iv) நெலுவ பிரதேச செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட நெலுவை சமகி மாவத்தைக்கு கொங்கிரீட் இடும் செயற்திட்டத்தை பரீட்சித்த போது கொங்கிரீட் படையின் ஓரத்தின் இருபக்கமும் இடைக்கிடையே குழிகள் தோன்றியிருந்ததுடன் அந்தக் கலவை குறித்த நியமத்தின் பிரகாரம் இட்டு சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கும் போது எந்தக் குறைத்தலுமின்றி ரூபா 588,000 தொகை ஒப்பந்த சங்கத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

நெலுவை பிரதேச செயலகத்தில் வெல்லங்குல கந்த வீதிக்கு கொங்கிரீட் இடும் செயற்திட்டத்திற்காக ஒப்பந்த சங்கத்தைத் தெரிவு செய்யும் போது அதன் நிதிசார் இயலுமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட சேமிப்புக் கணக்கு 2015 ஒக்தோபர் 20 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு அத்திகதியில் மீதி ரூபா 1,500 ஆக இருந்தது. இந்தச் சங்கத்திற்கு ஒப்பந்தம் கையளிப்பதற்கு முன் காணப்பட்ட நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் போது 2015 ஒக்தோபர் 07 ஆந் திகதி விவசாய அமைப்புடன் ரூபா 490,000 தொகையான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

## 3.10 நட்டமும் இழப்பும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) காலி மாவட்ட செயலக கட்டிடத்தில் தாபிக்கப்பட்டிருந்த மின்உயர்த்தி 2014 செப்தெம்பர் 15 ஆந் திகதி ஏற்பட்டிருந்த இழப்பிற்குரிய ரூபா 213,370 தொகையான நட்டம் புத்தகங்களில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கரந்தெனிய பிரதேச செயலகத்தில் சுத்திகரிப்பு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நிறுவனமொன்றைத் தெரிவு செய்யும் போது ஊழியர் ஒருவர் பெறுகின்ற ஆகக் குறைந்த சம்பளம் மற்றும் ஏனைய நிபந்தனைகளை கவனத்தில் கொள்ளாமல் கூறு விலைகளுக்காக நியாயமான சந்தர்ப்பமொன்றைப் பெறாதிருக்கும் போது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் வெளியேறியமையால் அரசாங்கத்திற்கு ரூபா 124,560 நீதி ரீதியான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(இ) ஹிக்கடுவ பிரதேச செயலகத்தில் சேவையாற்றி 2010 மே 30 ஆந் திகதி மரணமடைந்து ஓய்வூதியம் பெற்றவருக்கு அத்திகதி முதல் 2015 பெப்ரவரி மாதம் வரை செலுத்தப்பட்ட ஓய்வூதியத்தில் ரூபா 121,883 தொகை அறவிட வேண்டியிருந்தது. 2010 ஆம் ஆண்டின் பின்னர் உயிர் வாழ்வுச் சான்றிதழ் வழங்கப்படாதிருந்த போதும் இந்த ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நாகொட பிரதேச செயலகத்தினால் நலனாளிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக கை இல்லாத 400 பிளாஸ்டிக் கதிரைகளைக் கொள்வனவு செய்யும் போது ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த கேள்வி கோரல் புறக்கணிக்கப்பட்டமையினால் அரசாங்கத்திற்கு ரூபா 120,800 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(உ) நெலுவ பிரதேச செயலகத்தில் சேவையாற்றிய இரண்டு பெண் அபிவிருத்தி உத்தியோகததர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 277,000 இனை அவர்கள் சேவையிலிருந்து விலகிச் சென்று ஒருவருட காலம் கடந்திருந்த போதிலும் அதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கரந்தெனிய பிரதேச செயலகத்தில் உத்தியோகத்தர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 815,650 தொகையான காசோலை மோசடிக்கு பலவருட காலம் கடந்திருந்தும், அந்நட்டத்தை அறவிடுதல் மேலும் தாமதிக்கப்பட்டிருந்தது.

(எ) மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்களின் வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 பிரதேச செயலகங்களுக்குரிய இரண்டு வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்களிலிருந்து ரூபா 137,366 கூட்டுத்தொகையான நட்டம் ஏற்பட்டிருந்த போதிலும், அந்த நட்ட இழப்புத் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் தாமதடைந்திருந்தது.

(ii) அம்பலாங்கொடை பிரதேச செயலகத்திற்குரிய வாகனமொன்றிற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக வழக்குத் தீர்ப்பு கிடைத்து 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், இரண்டாவது பிரதிவாதியிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 130,618 தொகையை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.11 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடங்கியிருந்த கணக்காய்வு பந்திகளிலிருந்து சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் சீராக்கப்படாதிருந்த பந்திகளுக்குரிய தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2014 | 3.3 | மாவட்ட செயலகத்திற்குரிய நிர்வாக உத்தியோகத்தர் விடுதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வெளித்தரப்பினரால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 148,800 தொகையான வீட்டு வாடகையும் அறவிடப்படவில்லை. |
| 2014 | 3.1(அ)(ii) | வீதிக்கு காபட் இடுவதற்காக 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது இலங்கை பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கு 27 செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 139,33,203 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.12 முகாமைத்துவ நலிவுகள்

பிரதேச செயலகங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் முகாமைத்துவ நலிவுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) நியாகம பிரதேச செயலகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிட்டிகல நீர் வழங்கல் உத்தேசத் திட்டத்தின் 01 ஆம் இலக்க பம்பிக் கூடத்தை நிர்மாணிப்பதற்காக 4 பேர்ச் காணியை அரசாங்கத்திற்கு கையேற்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 02 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், காணி கையேற்றல் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கிராமங்களை விரிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 32 ஏக்கர் 26 பேர்ச் அளவான டயமன்கந்த சுத்தெல்லேவ முகலான காணியை அரசாங்கத்திற்கு கைப்பற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், உரிய தரப்பினரில் காணப்படுகின்ற செயற்திறனின்மை மற்றும் கூட்டிணைப்பு தவறுகளின் காரணமாக காணியைக் கையேற்று அந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(iii) கிராமங்களை விரிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 05 ஏக்கர் 09 பேர்ச் அளவான மிரிஸ்வத்துமுகலான 01 ஆம் இலக்க காணி அரசாங்கத்திற்கு

கையேற்கப்பட்டு 16 வருடங்கள் கடந்திருந்த போதும், அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய எந்த செயற்திட்டமும் அமுல்படுத்தப்பட வில்லை.

(ஆ) கரந்தெனிய பிரதேச செயலகம்

---

ரீ.டீ. சமரவீர விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்காக உத்தேசிக்கப்பட்ட 2.127 ஹெக்டேயர் அளவான காணி, காணி கைப்பற்றல் அதிகாரச்சட்டத்தின் 38(அ) உப விதி ஏற்பாட்டில் 0.285 ஹெக்டேயர் என குறிப்பிடப்பட்டு காணியை அரசாங்கத்திற்கு கையேற்கும் எஞ்சிய நடவடிக்கைகள் 08 வருட காலமாக நிறுத்தப்பட்டிருந்தது.

(இ) பெந்தோட்டை பிரதேச செயலகம்

---

முத்தன்கொட மானானவத்த காணியின் பகுதியொன்றைக் கைப்பற்றுவதற்காக கிடைக்கப்பெற்ற ரூபா 25,000 தொகை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது 1994 யூலை 15 ஆந் திகதி முதல் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) நெலுவ பிரதேச செயலகம்

---

தவலம நெலுவ பட்டுவங்கல வீதியில் 9/5 பாலத்தை நிர்மாணிப்பதற்குரிய காணி அரசாங்கத்திற்கு கையேற்கப்பட்டதாக 2014 மே 09 ஆந் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டிருந்த போதும், 2016 பெப்ரவரி மாதம் வரையிலும் ஏனைய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஹிக்கடுவ பிரதேச செயலகம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தொடன்துாவ பொதுச் சந்தையை நிர்மாணிப்பதற்காக மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சிற்காக 0.1709 ஹெக்டேயர் அளவான மாதறமுல்ல கும்புறுவ்விட்ட காணியைக் கையேற்கும் நடவடிக்கை 1999 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு காணி கைப்பற்றப்பட்டிருந்த போதிலும், அதன் நட்டஈடு செலுத்துதல் நிறுத்தப்பட்டிருந்தது. அதற்காகக் கிடைத்த ரூபா 500,000 பணம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் நட்டஈடு செலுத்துதல் தாமதமடைந்தமையினால் அதன் அடிப்படையில் கவனத்தில் கொள்ளக்கூடிய வட்டித் தொகையையும் செலுத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) கடற்றொழில் வீடமைப்பு உத்தேசத்திட்டத்தை அமுல்படுத்துவதை இலக்காகக்கொண்டு கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் மூலம் 1995 ஆம் ஆண்டின் போதும் 2000 ஆம் ஆண்டின் போதும் அரசாங்கத்திற்கு கையேற்கப்பட்ட முறையே 0.243 ஹெக்டேயர் அளவான மோதர பட்டுவத்த பிம்புறுதெனிய காணி மற்றும் 0.3501 ஹெக்டேயர் அளவான உடுமுல்ல மத்துமகேவத்த காணி என்பவை நோக்கத்தின் பிரகாரம் எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) யக்கலமுல்ல பிரதேச செயலகம்

---

2014 இன் மாகாண நெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கறாகொட ஜம்புகஸ்ஹேன வீதிக்கும் யட்டமலகல பஹலவத்த வீதிக்கும் கொங்கிரீட் இடுவதற்காக ஒப்பந்தக்காரரொருவருக்கு ரூபா 978,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2015 ஆகஸ்ட்

31 ஆந் திகதிய மாவட்ட பொறியியலாளரின் அறிக்கையின் பிரகாரம் அந்த இரண்டு வீதிகளினதும் கொள்ளளவுச் சக்தி அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விடக் குறைவான பெறுமதியைக் கொண்டமையால் செயற்திட்டம் தோல்வியடைந்திருந்த போதிலும், அது தொடர்பாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.13 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 65 | 58 | 07 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 44 | 22 | 24 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,771 | 1,740 | 59 | 28 |
| (iv) | ஆரம்ப நிலை | 175 | 175 | 04 | 04 |
| | மொத்தம் | 2,055 | 1,995 | 94 | 34 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் சிரேஷ்ட நிலைக்குரிய 01 பதவியும், மூன்றாம் நிலைக்குரிய 17 பதவிகளும், இரண்டாம் நிலைக்குரிய 45 பதவிகளும், ஆரம்ப நிலையில் 04 பதவிகளும் வெற்றிடங்களாகக் காணப்பட்டன. அந்த வெற்றிடங்களை முறைப்படி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 யூன் 30 ஆந் திகதியளவில் மூன்றாம் நிலைக்குரிய 02 பதவிகளும், இரண்டாம் நிலைக்குரிய 28 பதவிகளும், ஆரம்ப நிலைக்குரிய 02 பதவிகளும் மிகையாகக் காண்பிக்கப்பட்டதுடன் அந்த ஊழியர் எண்ணிக்கைக்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.